பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
30 03 2026 MONDAY 7 15 PM

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மகளிர் நலனுக்காக எண்ணற்ற திட்டங்களை தேசிய ஜனநாயக கூட்டணி அரசு செயல்படுத்தியுள்ளதாக பிஜேபி கூறியுள்ளது.

2. கேரளத்தில் மக்கள் நலனை கருத்தில் கொண்டே ஐக்கிய ஜனநாயக முன்னணி செயல்பட்டு வருவதாக காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

3. மேற்குவங்கத்தில் உயரதிகாரிகளை, தன்னிச்சையாக தேர்தல் ஆணையம் இடமாற்றம் செய்துள்ளது ஏற்புடையதல்ல என்று திரிணாமுல் காங்கிரஸ் கட்சி குறை கூறியுள்ளது.

4. ஆப்கானிஸ்தானில் நிலச்சரிவு மற்றும் மழை வெள்ளத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 28-ஆக அதிகரித்துள்ளது.

5. ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Preeti Pawar மற்றும் Deepak காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>><<<<<

மகளிர் நலனுக்காக தேசிய ஜனநாயக கூட்டணி அரசு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி, பிஜேபி வாக்குச்சாவடி முகவர்களிடையே காணொலி வாயிலாக உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

மகளிர் நலனுக்காக எண்ணற்ற திட்டங்களை தமது அரசு நிறைவேற்றியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதனை, பிஜேபி கட்சியினர் பொதுமக்களிடையே கொண்டு செல்ல வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

புதுச்சேரியில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு பொறுப்பேற்ற பின்னர் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

காங்கிரஸ் - திமுக கூட்டணியின் முறைகேடுகளை புதுச்சேரி மக்கள் உணர்ந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

அந்த கூட்டணி கட்சிகளுக்கு இடையே கருத்து வேறுபாடுகள் நிலவி வருவதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

புதுச்சேரியில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆட்சியமைக்கும் என்றும் திரு. நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்தார்.

>>>>><<<<<

கேரளாவில், மக்கள் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு, காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி செயல்பட்டு வருவதாக அக்கட்சியின் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி கூறியுள்ளார்.

இன்று கோட்டயத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

இடதுசாரி முன்னணியும், பிஜேபியும் மக்கள் நலனில் அக்கறையின்றி செயல்பட்டு வருவதாக திரு. ராகுல் காந்தி குற்றம் சாட்டினார்.

>>>>><<<<<

மேற்குவங்கத்தில் மூத்த அதிகாரிகளை, தேர்தல் ஆணையம் தன்னிச்சையாக இடமாற்றம் செய்துள்ளது ஏற்புடைய தல்ல என்று திரிணாமுல் காங்கிரஸ் கட்சித் தலைவர் செல்வி மம்தா பானர்ஜி கூறியுள்ளார்.

அம்மாநிலத்தில்ன் *Belda*-வில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகளில் பிஜேபி தலையிடுவதாகவும் செல்வி மம்தா பானர்ஜி குற்றம் சாட்டினார்.

>>>>><<<<<

தமிழகம், கேரளம், மேற்குவங்கம், அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலில் 2 லட்சத்திற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு, வீட்டிலிருந்தே வாக்களிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதுதொடர்பாக தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தகுதியுள்ள வாக்காளர்கள் இதற்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

85 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களும், தகுதியுடைய மாற்றுத் திறனாளிகளும் இந்த வசதியை பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மேற்காசியாவில் நிலவிவரும் பதற்றம் காரணமாக, இதுவரை 5 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பாக நாடு திரும்பியுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

துறைமுகங்களின் செயல்பாடுகளும் வழக்கம் போல் நடைபெற்று வருவதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் சமையல் எரிவாயு விநியோகம் தடையின்றி நடைபெற்று வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமையல் எரிவாயு சிலிண்டர்களை பதுக்குவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இதுதொடர்பாக 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதாகவும், அதில் 2 ஆயிரம் சிலிண்டர்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மேற்காசியாவில் நிலவும் பதற்றமான சூழலை தடுக்க உடனடி நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி தெலங்கானா சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அம்மாநில துணை முதலமைச்சர் திரு. Mallu Bhatti Vikramarka இந்த தீர்மானத்தை தாக்கல் செய்து பேசினார்.

இந்த பதற்றம் காரணமாக, மேற்காசியா மட்டுமின்றி உலகம் முழுவதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்த மோதல் காரணமாக, பெட்ரோலியப் பொருட்களின் விநியோகமும் பாதிக்கப்பட்டுள்ளதாக திரு. Mallu Bhatti Vikramarka கூறினார்.

>>>>><<<<<

*மின்னணு உதிரி பாகங்கள் உற்பத்தி திட்டத்தின் கீழ், 61 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான 75 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.*

*இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதன்மூலம் 65 ஆயிரம் நேரடி வேலைவாய்ப்புகள் உருவாக வாய்ப்புள்ளதாக கூறினார்.*

*மின்னணு உதிரி பாகங்கள் உற்பத்திக்கு தொடர்ந்து ஊக்கமளிக்கப்படும் என்றும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.*

>>>>><<<<<

*நடைபாதை வியாபாரிகளுக்கான கடனுதவி திட்டத்தின் கீழ், ஒரு கோடிக்கும் மேற்பட்ட கடன்கள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு. Tokhan Sahu கூறியுள்ளார்.*

*மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், இந்த திட்டத்தின் கீழ் 17ஆயிரத்து 115 கோடி ரூபாய் அளவிற்கு கடனுதவி விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.*

*2020ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.*

*நடைபாதை வியாபாரிகளுக்கு 15 ஆயிரம் ரூபாய் எவ்வித உத்திரவாதமும் இன்றி கடனுதவி வழங்கப்படுவதாக திரு. Tokhan Sahu தெரிவித்தார்.*

>>>>><<<<<

*தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கத்திற்கு 95 ஆயிரத்து 692 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு. கமலேஷ் பஸ்வான் கூறியுள்ளார்.*

*மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்திற்காக ஏற்கனவே வழங்கப்பட்ட பணிகளுக்கான நிதியை வழங்குவதற்காக 31 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.*

>>>>><<<<<

நிலக்கரி உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

நடப்பு நிதியாண்டிற்கான இலக்கு, முன்கூட்டியே எட்டப்பட்டுள்ளதாக நிலக்கரி துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நிலக்கரி விநியோகமும் சீராக நடைபெற்று வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

இந்தியா - ரஷ்யா இடையே வெளியுறவு அதிகாரிகள் நிலையிலான பேச்சுக்கள் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

இந்தியாவின் சார்பில் வெளியுறவுதுறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி தலைமையிலான குழுவினர் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர்.

ரஷ்யாவின் சார்பில் அந்நாட்டு வெளியுறவுத்துறை துணை அமைச்சர் திரு. Andrey Rudenko தலைமையிலான குழுவினர் இதில் கலந்து கொண்டனர்.

இருநாடுகளுக்கு இடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து இந்தக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

ஆந்திராவில் 9 நக்ஸலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

இதன்மூலம் ஆந்திராவில் நக்ஸலைட்டு பிரச்சினைக்கு கிட்டத்தட்ட முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளதாக அம்மாநில காவல்துறை தலைவர் திரு. ஹரிஷ் குமார் குப்தா கூறியுள்ளார்.

விஜயவாடாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காவல்துறையினர் விடுத்த வேண்டுகோளை ஏற்று, நக்ஸலைட்டுகள் சரணடைந்து வருவதாக தெரிவித்தார்.

>>>>><<<<<

ஆப்கானிஸ்தானின் நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 28ஆக அதிகரித்துள்ளது.

கடந்த சில நாட்களாக பெய்த கனமழை காரணமாக அந்நாட்டின் பல்வேறு மாகாணங்களில் நிலச்சரிவு மற்றும் வெள்ள பாதிப்பு ஏற்பட்டதாக தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

வேளாண் பயிர்களும் பெருமளவு சேதமடைந்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

பாகிஸ்தானில் பெட்ரோலியப் பொருட்களின் கையிருப்பு குறித்து, அந்நாட்டு பிரதமர் திரு. Shehbaz Sharif இன்று ஆய்வு மேற்கொண்டார்.

பெட்ரோலியப் பொருட்களின் விநியோகம் மற்றும் எதிர்கால தேவை குறித்து, இதில் விரிவாக ஆலோசிக்கப்பட்டதாக அந்நாட்டு அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பெட்ரோலியப் பொருட்களின் பயன்பாட்டை குறைப்பது குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Preeti Pawar மற்றும் Deepak காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

மங்கோலியாவின் Ulaanbaatar-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 54 கிலோ எடைப்பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் Preeti Pawar - கஜகஸ்தானின் Elina Bazarova-வை வென்றார்.

ஆடவர் 70 கிலோ எடைப்பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் Deepak - உஸ்பெகிஸ்தானின் Asadullaev Khavasbek-வை வென்றார்.

>>>>><<<<<

உலக Wushu சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Lanchenbi Chanu Rajkumari வெண்கலப்பதக்கம் வென்றார்.

சீனாவின் Tianjin-ல் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஜூனியர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா 3 தங்கம், 2 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

>>>>><<<<<

*உலக கோப்பை டேபிள் டென்னிஸ் போட்டி Macao-வில் இன்று தொடங்கியது.*

*இந்தியாவின் சார்பில் மனிக்கா பத்ரா உள்ளிட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர்.*

>>>>><<<<<

*ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி இன்று ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.*

*குவஹாத்தியில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.*

>>>>><<<<<

*எகிப்தில் நடைபெற்று வரும் சர்வதேச ஜூனியர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மாயா ராஜேஸ்வரன் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 6-4. 6-4 என்ற செட்கணக்கில் செக்குடியரசின் Pavla Sviglerova-வை வென்றார்.*

>>>>><<<<<

*20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து போட்டியில் பங்கேற்பதற்கான 23 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இப்போட்டி, தாய்லாந்தில் நாளை மறுநாள் தொடங்கி அடுத்த மாதம் 19ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.*

>>>>>END<<<<<